**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**
**முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி/ நீதித்துறை நடுவர்,**
**சங்கரன்கோவில்**

Cr.M.P.No.9/2026 in C.C.No.1 of 2025

**குருவிகுளம் காவல் நிலைய குற்ற எண்.187/2013**
**பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC and 4 of TNPWH Act**
**உத்தரவு நாள்: 07.03.2026**

பேச்சிமுத்து, த/பெ.பெரியமாரியப்பன் என்ற வேலு ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
குருவிகுளம் காவல் நிலையம்
குற்ற எண்.187/2013 ... எதிர்மனுதாரர்/வாதி

**மனுநாள்: 05.03.2026, மனு 437 Cr.P.C.**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்/எதிரி தரப்பில், மனுதாரர்/எதிரி 23.02.2026 முதல் காவலில் இருந்து வருவதாகவும், அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், அவர் கூலி வேலை செய்து வருபவர் என்றும், அவர் நிரந்த முகவரி உடையவர் என்றும், அவர் நீதிமன்ற நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை வழங்குவதாகவும், எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு தரப்பில், குருவிகுளம் காவல் நிலைய குற்ற எண்.187/2013 பிரிவுகள் 294(b), 324, 506(ii) IPC and 4 of TNPWH Act வழக்கில் 23.02.2026 ல் எதிரி கைது செய்யப்பட்டு, தற்போது சிறைவாசியாக இருந்து வருகிறார் என்றும், வெளி மாவட்டத்தில் வசித்து வருவதாலும், கடந்த 13 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்து வந்ததாலும், மீண்டும் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில், ஆஜராகமல் இருக்கக்கூடும் என்றும், மேற்படி எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகமல் தலைமறைவாக கூடும் என்றும், மேற்படி எதிரியை பிணையில் விடுவிக்க காவல்துறை சார்பில் கடுமையான ஆட்சேபனை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலித்ததில் மனுதாரர்/2ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகததால் அவருக்கு எதிராக பிணையில் விடா பிடியாணை 26.05.2025 அன்று பிறப்பிக்கப்பட்டது என்பதையும், மனுதாரர் வழக்கு கோப்பில் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் குடியிருக்கவில்லை என போலீஸ் தரப்பில் தெரிவித்து கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து சான்று பெற்று நீதிமன்றத்தில் அளித்தனர் என்பதையும், மனுதாரரை கண்டுபிடிக்க இயலவில்லை என தெரிவித்து அவருடைய ஜாமீன்தார்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென போலீஸ் தரப்பில் மனு செய்யப்பட்டது என்பதையும், அம்மனு குற்ற பல்வகை மனு எண்.2/2025 ஆக வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரரின் ஜாமீன்தார்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 25.07.2025 அன்று முடித்து வைக்கப்பட்டது என்பதையும், அதன்பிறகு கு.வி.மு.ச. பிரிவு 82, 83ன் கீழ் எதிரிக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த மனுதாரரின் இருப்பிடம் தெரிய வந்ததாக தெரிவித்து பிடியாணை தந்து உதவுமாறு போலீஸார் தரப்பில் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது என்பதையும், அந்த விண்ணப்பத்தின் பேரில் 23.02.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட பிணையில் விடா பிடியாணையை அன்றைய தினமே போலீஸார் நிறைவேற்றி மனுதாரரை கைது செய்து அழைத்து வந்தார்கள் என்பதையும், அவ்வாறு மனுதாரர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு இன்றுவரை 13 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பதையும் அறிய முடிகிறது. இந்நிலையில், மேற்படி பொருண்மைகளை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் மனுதாரர் இந்நீதிமன்றத்தின் முன்பு தொடர்ச்சியாக ஆஜராகாமல் இருந்ததை கருத்தில் கொண்டும், மனுதாரர்க்கு எதிராக 05.03.3036 அன்று குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு வழக்கின் விசாரணை தற்போது தொடங்கப்பட உள்ளதைக் கருத்தில் கொண்டும், மனுதாரரை பிணையில் விடும்பட்சத்தில் அவர் நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் மீண்டும் தலைமறைவாகிவிடக்கூடும் என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரரை பிணையில் விடுவிப்பது நீதியின் பொருட்டு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.07 18:01:55 +0300

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி/

நீதித்துறை நடுவர்,

சங்கரன்கோவில்